**Kalanjiyam International Journal of Tamil Studies**
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.84
https://ngmtamil.in/

# பண்டைத் தமிழரின் வழிபாட்டுமுறைகளில் நாயன்மார்களின் நெறிகள்

**பேராளர் அ.அகிலாண்டேசுவரி, எம்.ஏ,எம்.ஃபில், பி.எட்,(பி.எச்.டி),**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் & தமிழ்க்கல்லூரி,
பேரூர் – 641010. akila.prasanna2011@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மானுட வர்க்கத்தின் இயல்பான வளர்ச்சியில் பரிணாமத்தில் தோன்றியது சமயம். மனிதன் ஒருவனுக்குத்தான் பகுத்தறியும் திறன் இருக்கிறது. அவன் ஒருவனால் தான் உலகில் உள்ள அனுபவங்கள் அனைத்தும் புறவெளித் தோற்றங்கள் இவை எல்லாவற்றிற்கும் மேலான அனுபவம் ஒன்று உண்டு என்று உறுதியாக நம்பமுடியும். பண்டையத் தமிழர்கள் இந்தப்பெருஞ்சுடரான தத்துவத்தை அனைவரும் அணுகலாம் என்ற நம்பிக்கையை வழிபாட்டு முறைகளாக வகுத்துக் கொண்டனர். இத்தகைய வழிபாடுகள் இயற்கையை தெய்வமாகப் போற்றுதல் தொடங்கி பல்வகை சமய வழிபாட்டு முறைகளாக உருவாக்கப்பெற்றன. அவ்வகையிலே திருக்கோயில்களில் இன்று வீற்றிருந்து வழிபாட்டு நெறியினை தம்முடைய வாழ்வியலின் வழி அருள்புரிந்து வாழ்ந்து காட்டிய பண்டையத் தமிழர்களான சைவ நாயன்மார்களான, சிறுத்தொண்டர், கண்ணப்ப நாயனார், உருத்திரபசுபதியார், நந்தனார், சேரமான் பெருமான் நாயனார், திருக்குறிப்புத்தொண்டர், ஆகியோரின் வழி ஆய்ந்துரைக்கும் வகையில் இவ்வாய்வு அமைகின்றது.

**ஆய்வு முன்னுரை**

பண்டையத் தமிழர்களின் வாழ்க்கையில் இயல்பாக மலர்ந்த சமயம் காலப்போக்கில் அறிவாராய்ச்சியில் தலைப்பட்டு மெய்ஞானத்தை வளர்க்கும் விஞ்ஞானமாக வளர்ந்தது. சமயத் தத்துவங்கள் கொள்கைகள், கோட்பாடுகள் ஆகியன அறிவியல் உணர்வோடு அணுகப்பெற்றன. அவ்வகையிலே பண்டைத்தமிழரின் கணபதி வழிபாடும் சிறு தொண்டநாயனாரும், தமிழர்களின் முருகவழிபாடும் கண்ணப்ப நாயனாரும், சிவலிங்க வழிபாட்டில் உருத்திரபசுபதியார், நந்தனார் காட்டிய சிவலிங்க வழிபாடுகள் சேரமான் பெருமான் நாயனாரும் நடராசர் வழிபாடும், திருக்குறிப்புத் தொண்டர் புராணம் காறும் காமாச்சியம்மை வழிபாடுகள், ஆகியவற்றை பன்னிரண்டாம் திருமுறை நூலாகத் திகழ்கின்ற பெரியபுராணம் வழி அறிவிக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

**கலைச்செற்கள்:**

**மானுடர்கள் - பரிணாமம் – பெருஞ்சுடர் – வழிபாட்டுநெறி – அறிவாராய்ச்சி – மெய்ஞானம் – கோட்பாடுகள் - கணபதிவழிபாடு - அறியாமை - திருவுரு – திருச்செங்காட்டங்குடி - கணபதீச்சரம்**

**– வாதாபி – சீராளதேவன் – நினைவுக்குறி – விநாயகர்வணக்கம் - முருகவழிபாடு - வேட்டுவகுலம் - முருகவேள் - நாகன் - நெடியவேல் - காணிக்கை - குரவைக் கூத்து - ஆதிக்குடிகள் - திருக்காளத்திமலை - குருதிநீர் - கண் தானம் – அற்புதக்கொடை – அணு - நியூட்ரான் - போர்ட்டான் – எலக்ட்ரான் - லிங்கம் ஆவுடை - சித்தரித்தல் - பிரளயம் - கந்தழி – கல்தூண் - ஓம்காரம் - உருத்திராக்கம் - தெய்வீகப்பிழிவு – இடபாகம் – பயிலுதல் - ஆன்றோர்கள் – திருவைந்தெழுத்து – பேரிகை – கோரோசனை - திருவாயில் - ஆடல்வல்லான் - உடுக்கை – மும்மலம் - முயலகன் வீடுபேறு - நடராசர் - சாரவெண்பொடி - சிலம்பொலி - இயற்றமிழ் - காமாட்சியம்மை -அறங்கள் .**

**பண்டைத்தமிழர் வழிபாட்டின் நோக்கங்கள்**

பண்டையத் தமிழர்களிடையே சமயவழிபாடு பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே நடைமுறைக்கு வந்துவிட்டது. உயிர்கள் அறியாமையினின்றும் விலகி அறிவினைப் பெறும் முயற்சியே வாழ்க்கை, அறியாமையுயை ‘உயிர் அறிவே’ திருவுருவான கடவுளின் துணையை நாடி அறிவினைப் பெற்று வளர்வதற்கு துணை செய்வதே "வழிபாடு" ஆகும். அதுவே வாழ்க்கையின் பயன். தன் உயிர்கள் முற்றுமாக அறியாமையினின்றும் விடுதலைபெற்று அறிவுநிலையை அடைதலே ‘இறுதிநிலை’ இதுவே சமயவழிபாட்டின் நோக்கமாக அமைகின்றது.

**பண்டைய தமிழரின் கணபதி வழிபாடும் சிறுத்தொண்ட நாயனாரும்**

பண்டைத் தமிழரின் கணபதி வழிபாடு பரவுவதற்கு முதற்காரணமாக இருந்தவர் சிறுத்தொண்ட நாயனார் என்பர் ஆய்வாளர்கள். சிறுத்தொண்ட நாயனாரின் இளமைப் பெயர் பரஞ்சோதி, சிறுத்தொண்டர் பல்லவனுக்கு தளபதியாய் இருந்தவர். திருச்செங்காட்டங்குடியில் திருத்தொண்டு புரிந்து வந்தார். சிவாலயத்தில் கணபதிக்கும் கணபதீச்சரம் அமைத்தார் என்பார். இதனையே டாக்டர் மா.இராசமாணிக்கனார்,

சிறுத்தொண்ட நாயனார் சாளுக்கியர் தலைநகரமான வாதாபியை கைப்பற்றிய போது இப்புதிய கடவுளை அங்குக் கண்டார். தான் முன்னர்க் கண்டறியாத அத்திருவுருவத்தை கண்டதும் வியப்புற்று அதனை எடுத்து வந்து தம் ஊரில் சீராள தேவன் கோயிலில் வைத்து வழிப்படலானன், அதுமுதல் அக்கோயில் ‘கணபதீச்சரம்’ எனப்பெயர் பெற்றது என்பது தெரிகின்றது. என்ற ஆய்வுரை வழியும் டாக்டர் தெ.பொ மீனாட்சி சுந்தரனார் முதன் முதல் கணபதி என்ற பெயர் கேட்கப்படுவது ‘கணபதீச்சரம்’ என்ற தொடரில் தான், இந்தக் கணபதீச்சரம் என்ற கோயிலைக் கட்டியவர் சிறுதொண்ட நாயனாரே ஆவார் (ச. பெ. சந்திரசேகரன், தமிழ்நாட்டில் கணபதி வரவும் - வழிபாடும், பக்கம் :54)

என்ற கருத்தாக்கங்களின் வாயிலாக பண்டைத் தமிழரின் வழிபாட்டில் கணபதி வரவு சிறுத்தொண்டரின் நெறியால் உருவாக்கப்பட்டது என்பதை நிறுவலாம். இதனைப் பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் அரசனுக்கு துணைநின்று வடபுறத்து வாதாபியை வென்றவர் இப்பெருமகனார், அந்நகரின்றும் ஒரு விநாயகப் பெருமான் திருவுருவத்தையும் நினைவுக்குறியாக கொணர்ந்து தமது நகரமாகிய திருச்செங்காட்டங்குடித் திருக்கோயிலாகிய கணபதீச்சரத்தில் தாபித்தார். அவரே இப்போது வாதாபி கணபதி என விளக்கமாக அறியப்பட்டு வழிபடப் பெறுகின்றார்.

சிறுத்தொண்டர் பெருமையை ஞான சம்பந்தப் பெருமான் தனது திருச்செங்காட்டங்குடி தேவாரப் பதிகங்களில் பலவிடங்களில் எடுத்துரைக்கின்றார்.

**“பொடி நுகரும் சிறுத்தொண்டர்க்கு அரும் செய்யும் பொருட்டாக**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச் சரத்தானே”**

**(முதல்திருமுறை, 62ம் பதிகம், 10பாடல்)**

போன்ற அடிகள் குறிப்பிடத்தக்கன. நாயன்மார்களாலேயே போற்றப்பெற்ற நாயனாராக சிறுத்தொண்டர் திகழ்வது மிகவும் சிறப்புக்குரியதாகும். கிபி 12ஆம் நூற்றாண்டில் விநாயகர் வணக்கம் பண்டைத் தமிழகத்தில் வலுவாகக் கால்கொண்டு விட்டமையால் பெரியபுராணத்தில் இடம்பெற்று உள்ளது என்பதையும் இங்கு தெளியலாம்.

**தமிழர்களின் முருகவழிபாட்டில் கண்ணப்பநாயனார் வாழ்வியல்**

தமிழர்களின் வாழ்வியயில் இரண்டறக் கலந்தது முருக வழிபாடு ஆகும். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என்பர், குறிஞ்சி நிலத் தெய்வம் முருகர் ஆவார். கண்ணப்பர் புராணம் உணர்த்தும் சமய வழிபாட்டு நெறிகளிலே கண்ணப்பர் பிறப்பதற்கு முன் அவரின் பெற்றோர் வேட்டுவகுல வழக்கப்படி முருகப் பெருமானை வழிபடுகின்றவர் என்பதைச் சேக்கிழார் சுவாமிகள்,

**“………முருகவேள் முன்றிற்சென்று**

**பரவுதல் செய்து நாளும் பாராய்க்கடனெறியினிற்பார்”**

**(சேக்கிழார் , பெரியபுராணம், பாடல்எண்: 660)**

என்று காட்டிச் செல்கின்றார்.

வேட்டுவர் தலைவனாகிய நாகன் போரில் வல்லநெடிய வேலை ஏந்திய முருகக் கடவுளுக்கு சேவற்கோழிகளையும், மயில்களையும் காணிக்கையாக விடுத்தனன்.

முருகன் முன்றிலில் தோரணமாய் மணிகளைக் கட்டி விட்டனர். அழகான கதம்ப மலர் மாலைகளை நான்கு திசைகளிலும் தொங்க விட்டனர், புகழ் அமைந்த குரவைக் கூத்து ஆடப்பெருவிழா எடுத்தனன், முருகப் பெருமானை வழிபட்டு விழா எடுத்ததன் வழியாகவும் சிவபெருமானின் அருளினாலும் திண்ணனார் பிறக்கின்றார்.

முருக வழிபாட்டின் தொன்மையினை திறனாய்வாளர் ஒருவர் குறிப்பிடுகையில் முருகவழிபாடு தமிழர் பண்பாட்டோடு, மொழி தத்துவத்தோடு, பழக்க வழக்கங்களோடு ஒன்றுபட்டிருக்கிறது. ஆதிகால மனிதர் குன்று சார்ந்த குறிஞ்சிப் பகுதிகளில் வாழ்ந்த காலத்தில் முருகக் கடவுள் படைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆதிக் குடிகளின் வழிபாட்டு முறையின் மிச்சசொச்சங்கள் முருக வழிபாட்டில் தங்கியிருக்கின்றன என்பர். (இராசேசுவரி பாலசுப்பிரமணியம் தமிழ்க்கடவுள் முருகள் வாலாறும் தத்துவமும், பக்கம்;54)

கண்ணப்பநாயனார் அன்பின் உயர்ந்த நிலைக்கு எல்லையாகவும் இலக்கியமாகவும் விளங்கியவர். திருக்காளத்தி மலையில் குடுமி தேவரை திண்ணனார் தம்முடைய பூசனை முறையில் வணங்க வருகின்றார். முன்பு செய்த தவத்தின் காரணமாக உண்டாகிய மிக்க அன்பினால் சிவபெருமானை திண்ணனார் காண்பதற்கு முன்னமே அவரது திருவருட்பார்வை திண்ணனார் மீது பட்டது அதனால் பிறவிச் சார்பானது நீங்கியது. திருக்காளத்தியப்பருடைய கண்ணின் புண்ணின் வரும் குருதி நீர் நிற்க முயற்சி செய்து முடியாமல் உற்ற நோயினை தீர்க்க ஊனுக்கு உனே தீர்வு என்று நினைத்து தமது கண்ணினை தோண்டி கையில் வாங்கி வலது திருக்கண்ணில் பொருத்தினார். இறைவன் தன்னுடைய இடக்கண்ணிலும் குருதி பெருகச் செய்கின்றார். திண்ணப்பர் கண்ணினை இடந்து எடுக்கும் சமயத்தில் இறைவன் சிவலிங்க திருமேனி நின்று ஒரு கையினை முளைக்கச்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி) 

செய்து அதன் வழி கண்ணப்பரது கையினை அன்புடனே பிடித்து அவர் கண்ணை தோண்டும் செயலினை தடுக்கின்றார். இறைவன் தம்முடைய திருவாக்கினால் கண்ணப்பரை வலது பக்கத்தில் நிற்க திருவருள் புரிகின்றார்.

ஆறு நாட்கள் செய்த பூசையினால் திண்ணனார் கண்ணப்பர் ஆகும் பேற்றினைப் பெறுகின்றார். இப்புராண நிகழ்வின் வழியாக முருகப்பெருமான் தம்மை இயல்பாக வழிபட்டோர்க்கு மக்கட்பேற்றையும் பிற நலன்களையும் ஈந்தருளும் தன்மையினையும் கண்ணப்பரின் அன்புமிகு வலிமையினையும் சிவலிங்க திருமேனியரான காளத்திநாதரை கண்ணப்ப நாயனார் வழிபட்டு கண் தானம் என்னும் அற்புதக் கொடையினை உலகிற்கு உணர்த்துகின்றார்.

**பண்டைத் தமிழர்களின் சிவலிங்க வழிபாடும் நாயன்மார்களும்**

சிவலிங்க வழிபாடு மிகவும் தொன்மையானது தெய்வத்திருமேனிகள் அனைத்திற்கும் மூலமாகச் சிவலிங்கம் இருக்கின்றது. சிவலிங்க வழிபாட்டால் எல்லாத் தெய்வங்களையும் வழிபட்ட பலன்கிட்டும் என்பது ஆகம அடிப்படையில் அமைந்த நம்பிக்கையாகும்.

உலகம் அணுக்களாலானது ஆகவே அணுவையே இறைவனது தோற்றமாகவும், வடிவமாகவும் கொண்டு அருவுருவநிலையில் சிவலிங்க வழிபாடு செய்யப்பெறுகின்றது.

இறைவனது சக்தியால் உண்டாகும் அணுவின் விளக்கமாக சிவலிங்கம் அமைந்துள்ளது. உருப்பெருக்கி கருவியால் பார்த்தால் அணுக்களெல்லாம் சிவலிங்கமாகவே தோன்றும். நியூட்ரான், போர்ட்டான், எலெக்ட்ரான் என்பன முறையே லிங்கம், ஆவுடை, கோமுகி வழி பெறும் அபிடேகநீர் ஆகியவற்றைக் குறிக்கும். (மதுராநந்தர், இந்துசமயம் வளர்நிலை,பக்கம்;21) என்று அறிவியில் சார் விளக்கத்தைக் காட்டுகின்றனர், பொதுவாக, இலிங்கமாவது இறைவனையும், ஆவுடையார் அவனது சக்தியையும், கோமுகியானது இறை அருளையும் குறிக்கின்றது என்பது ஆன்றோர் தரும் விளக்கமாகும்.

இலிங்கம் என்பதற்குச் ‘சித்தரித்தல்’ என்ற பொருள் உண்டு. பிரபஞ்சத்தைச் சிவன் சித்தரிக்கிறான் என்ற பொருளில் லிங்கம் என்ற பெயர் வந்தது என்று நூல்கள் கூறுகின்றன. பிரளய காலத்தில் பிரபஞ்சம் முழுவதும் எதில் ஒடுங்கி மீண்டும் வெளிவருகிறதோ அது லிங்கம் எனப்படுகிறது. (க.கணேசலிங்கம், சைவத்தை அறியுங்கள், பக்கம்:71) சைவநூல்களில் இலிங்கத்தின் பொருள்விளக்கமாகக் காட்டப்பெறுகின்றது.

சிவலிங்க வழிபாட்டின் தொன்மையினைச் சுட்டும் திறனாய்வாளர்கள் தமிழர்களின் சமயவாழ்வு பற்றிக் கூறுகையில் தமிழில் சிவலிங்கத்திற்கு ‘கந்தழி’ என்ற பெயரே முதன் முதலில் வழங்கப் பட்டது என்றும் கந்தழி என்பது வடிவம், பற்று ஆகிய அனைத்தையும் கடந்து தன்னுள் தானாகவே இருக்கும் மேலான தெய்வீகப்பிழிவு என்றும் விளக்குகின்றனர் (பி. ஆர். நரசிம்மன், சைவமரபும் மெய்ப்பொருளியலும்,பக்கம்:24) என்ற கருத்தினையும் அறியமுடிகின்றது.

‘கந்தழி’ என்பது தூண்வடிவில் அமைந்த வழிபாட்டுக்குரிய மரத்துண்டாகும். அம்மரமழிந்து பட்டபின்பு அதற்கு பதிலாக கல்தூண் அமைக்கப்பட்டது. இக்கல்தூணே பின்னர்ச் சிவலிங்கமாக மாறியது என்பர் ஆன்றோர்கள், இலிங்கம் ஓங்காரத்திலுள்ள அகர, உகர மகரங்களின் சேர்க்கையாகும். இலிங்கத்தின் அடிப்புறத்தைப் பிரம்மாவாகவும் நடுப்பாகத்தை திருமாலாகவும், மேல்பாகத்தை சிவனாகவும் கண்டுவழிபடுவர்.

சிவலிங்கத்தை வழிபட்ட பெரியபுராண அடியார்களின் வரலாறுகளில் இங்கு உருத்திர பசுபதியார், நந்தனார் ஆகிய நாயன்மார்களின் வழிபாட்டு நெறிகளில் பண்டைய தமிழர்களின் வழிபாட்டு முறைகளைக் காண்கிறோம்.

**உருத்திர பசுபதியாரின் உயர் வழிபாடுகள்**

திரு உருத்திராக்கம் சிவச்சின்னங்களுள் ஒன்று ஆகும். உருத்திரம் வேதங்களுட் சிறந்தது, மறைகளின் பயனாக உள்ளது. இத்தகைய உருத்திரங்கொண்டு அன்புநிறைந்த ஒருமை மனத்துடன் கழுத்தளவு நீரினுட்புக்குக் கைகூப்பி நின்று இடையறாது உருத்திரம் பயின்று நிற்றலே பெருந்தவமும் சிவபுண்ணியமுமாகும் என்பதை எடுத்துக்காட்டியவர்.

பசுபதியாகிய நிலைமாறி உயர்ந்த உருத்திரபசுபதியார் ஆவார், சேக்கிழார் பெருமான் இவரை,

**"........கங்கை நீர்ததும்பிய சடையார்.**

**கொள்ளு மன்பின்லுருத்திரங் குறிப்பொடு பயின்றார்"**

**(பெரியபுராணம் பாடல்எண்:102)**

என்று கூறுகின்றார். பயிலுதல் இடைவிடாது பலகாலமும் சொல்கின்ற நிலையினைக் குறிக்கின்றது என்பர் ஆன்றோர்கள், பசுபதியாக பலநாட்கள் ஒன்றுபட்ட உணர்வுடன் இவ்வாறு உருந்திரம் ஓதிய நிலையில் நின்று சிவபிரானது திருவருளைப் பெற்று உயர்கின்றார். வேதம் நான்கினும் மெய்ப்பொருளாகிய திருவைந்தெழுத்து திருவுருந்திரத்துள் இருக்கின்றது. இதனை வேதபுருடர்கள் கண்ணாகவும், திருவைந்தெழுத்தினை கண்மணியாகவும், ஆன்றோர் போற்றுவர், இதன்வாயிலாக.

உலகப் பொருள் அனைத்திலும் இறைவன் பகுப்பின்றி அவையேயாகக் கலந்து நிற்கும் விசுவரூபன், விசுவேகன் என்ற நிலைப்பாட்டினை திருவுருத்திரம் புகழ்ந்து விளக்கியுரைக்கிறது. பண்டைய தமிழரின் வழிபாட்டு சின்னங்களை எடுத்தியம்புகின்றது.

**நந்தனார் (திருநாளைப்போவார்) காட்டியதிருநெறிகள்**

நந்தனார் சிவபெருமானிடத்து பக்தி பூண்டவர். சிவதருமங்களைச் செய்யும் கொள்கையினைக் கொண்டு சிவனடித் தொண்டினைத் தம்முடைய வழிபாடாக செய்கின்றார். சிவபெருமானுடைய அருச்சனைக்கு பேரிகை முதலிய கருவிகள், போர்வைத்தோல், விசிறி, கோரோசனை முதலிய பொருட்களை அன்புடனே அளிக்கிறார். ஆடியும், பாடியும் திருக்கோயில் புறத்திலேயே நின்று,

**'திருப்புன்கூர்ச் சிவலோகன் சேவடிகள் மிக நினைந்து'**

**(பெரியபுராணம், பாடல் எண்;1056)**

வருகின்றார். ஒருநாள் இறைவனாகிய திருப்புன்கூர்மேய சிவலோகநாதர் தம் முன்பே இருக்கும் இடப வாகனத்தை விலகியிருக்கும்படி ஆணையிட்டு தம்மை 'நந்தனாருக்கு' நேர்காட்சியாக புலப்படும்படி அருளுகின்றார். திருவாயின் முன் நின்று கொண்டு நந்தனார் வணங்குகிறார். திருத்தில்லையினை வணங்க மிக்க காதல்கொள்கின்றார், அத்திருத்தலத்திற்கு சேரும் தன்மை என்குலத்தோடு பொருந்தவில்லை என்று எண்ணியவர், ஒருவாறு தில்லையைச் சென்று சேர்ந்து நிற்கின்றார். சிவன் அடித்தொண்டர் மனம் அழிந்த நிலையில் இறைவன் அவருடைய கனவில் தோன்றி கூறுவதைச் சேக்கிழார்.

**"இப்பிறயி போய் நீங்க வெரியினிடை மூழ்கி**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**முப்புரி நூன் மார்பருடன் முன்னணைவாய்! "**

**(பெரியபுராணம் பாடல் எண்;1068)**

எனக் காட்டுகிறார். இச்செய்தியை தில்லை வாழந்தணர்களுக்கும் இறைவன் அருள்கின்றார். புண்ணிய உருவமுடைய முனிவர் வடிவம் கொண்டு நந்தனார் வருகின்றார், தில்லைவாழந்தணர்கள் கைதொழுகின்றனர்.

டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் புகழ்வாய்ந்த சைவத்திருந்தொண்டர்களில் ஒருவரான நந்தனார், எளிய தாழ்த்தப்பட்டோர் குடியில் பிறந்தவராயினும், உயர்ந்த பக்தி நெறிக்குட்பட்ட நாயன்மார்களுள் ஒருவராக உயர்ந்தார். (கல்பகம், சொ, நந்தனார் கதைகள் – ஓர் ஆய்வு பக்கம் :39)

திருநாளைப்போவாராகிய நந்தனாரின் உயர்ந்த வழிபாட்டுச் செந்நெறி இதன் வழி உணர்த்தப் பெறுகின்றது, பண்டைத்தமிழரின் வழிபாட்டு முறைகளில் சமுதாய விழுமியத்தை அறிய இயலுகின்றது.

**ஆடல்வல்லான் வழிபாடும் கழறிற்றறிவார் நாயனாரும்**

ஆடல்வல்லான் (நடராசர்) வடிவம் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்து தொழில்களையும் சிவம் செய்கின்றார் என்பதனை உணர்த்துகின்றது. இந்த ஐந்து தொழில்களும் அவர் உயிர்கள் மேல் கொண்டுள்ள அருளால் நிகழ்த்தப்படுகின்றன.

உடுக்கை படைத்தலையும் அபயக்கை காத்தலையும், நெருப்பு அழித்தலையும், வலதுகால் மறைத்தலையும், இடதுகால் அருளுதலையும் உணர்த்தும், முயலகன் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலத்தினையும், தாமரை உள்ளத்தையும் உணர்த்தும். மும்மலமாகிய இடதுகையில் மூன்றுவிரல்கள் முயலகனைச் சுட்டிமலத்தை நீக்குமாறும், சுட்டு விரல் இடப்பாகத்தை சுட்டி சிவனருள் பெறுமாறும் அறிவுறுத்துகின்றது. (பெ.சுயம்பு, இந்தியாவில் சமயங்கள் , பக்கஎண்;33) என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதன் வாயிலாக ஆடல்வல்லான் உயிர்க்குயிராக இருந்து உள்ளத்தில் உள்ள மலங்களை நீக்கி, வீடுபேறு பெறுமாறு உயிர்களுக்கு அருளுகின்றார் என்பதைத் தாமரையும், அவரது திருநடனமே உலகங்களாகப் பரிணமிக்கின்றது என்பதைச் சிதறி அலைந்து கொண்டிருக்கும் சடைமுடியும் உணர்த்துகின்றன. இத்தகைய நடராசரின் ஆடல்கலையினை உணர்ந்தவர் அந்த சலங்கை ஒலியினை செவிகளில் கேட்டு மனம் நிறைந்த நாயனார் "கழறிற்றறிவார்" ஆவார். இவரை சேரமான்பெருமான் நாயனார் என்றும் வழங்குவர் சலவையாளன் சார வெண்பொடியை திருநீற்றுவேடம் எனக்கொண்டு அவரையும் கைகூப்பி வணங்கியவர் இம்மன்னர். இவர் தம்முடைய வழிபாட்டின் பயனாக ஈசனின் திருப்பாதச் சிலம்பொலி கேட்பித்தார். இவர் வேள்விகள் பலவற்றையும் செய்கின்றார். ஒருசமயம் சிலம்பொலி கேட்கவில்லை, கழறிற்றறிவார் மனம் வாடுகின்றார் சுந்தரரைக் காணும் வழியில் தில்லை வருகின்றார்.

தில்லை திருவீதியை வந்தடைந்து கூத்தபிரான் அற்புதக் கூத்தாடுகின்ற திருச்சிற்றம்பலத்தின் முன்னர் வழிபட்டு இறைவன் திருவடியினை நினைந்து பொன்வண்ணத்திருவந்தாதியினைப் பாடித்துதிக்கின்றார். திருச்சிலம்பின் ஒலியினை உலகத்தோர் வாழ கேட்பிக்க செய்கிறார் இறைவன். ஆடற்சிலம்பொலிகேட்ட நாயனார் உள்ளம் குளிர்கின்றார். தில்லை பதியினை வணங்குகின்றார். இயற்றமிழால் அன்பினை கலந்து வன்தொண்டரின் மீதுகொண்ட தோழமை திறந்தினால் தலங்கள் தோறும் விரும்பி வீற்றிருக்கும் சிவலிங்கத்திருமேனியை வழிபட்டு 'திருந்தொண்டர்' ஆடும் பேற்றினைப் பெற்றவர் சேரமான்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

பெருமான் நாயனார் ஆவார். இவ்வகையிலே ஆடல்வல்லான் வழிபாட்டை மேற்கொண்ட பண்டைத் தமிழக மக்களின் நெறியினையும், இங்கு தெளிகின்றோம்.

**திருக்குறிப்புத்தொண்டர் புராணம் காட்டும் காமாட்சியம்மை வழிபாட்டு முறைகள்**

பண்டைத் தமிழக மக்கள் வாழ்வியலில் சக்தி வழிபாட்டு நெறிகளைப் பின்பற்றினர், சக்தி இன்றேல் சிவம் இல்லை என்பது ஆன்றோரின் அமுதமொழி ஆகும். சாக்த வழிபாடு என்று சமய வாதிகள் குறிப்பிடுவர். அந்தகைய பெண் தெய்வமாகிய காஞ்சி காமாட்சியம்மையார் சிவவழிபாடு செய்த நிகழ்வினை பெரியபுராணம் குறிப்பிடுகின்றது. அம்பிகை பூசை செய்கின்ற நிகழ்வினைச் சேக்கிழார்.

**"திங்கடங்கிய புரிசடை யார்க்குத்**
**திருந்து பூசனை விரும்பினள் செய்ய"**

(**பெரியபுராணம் பாடல் எண்**: 1133)

என உரைக்கின்றார். சக்தியாகிய காமாட்சியம்மை அன்னை வடிவில் வந்தாள், முறைப்படி சிவபிரானை அர்ச்சனை செய்து முப்பத்திரண்டு அறங்களையும் மானுடர் அறியுமாறு வளர்த்துக் காட்டினாள். (அறிவொளி, அ.,காஞ்சிகாமாட்சி, பக்க என்: 38) என்று ஆய்வாளர்கள் குறிப்படுகின்றனர், சக்தியே சிவனை வழிப்பட்ட நிகழ்வினை சேக்கிழார் பதிவு செய்கின்றார்.

**ஆய்வு முடிவுரை**

பண்டைத்தமிழர்களின் வழிபாட்டு முறைகள் அனைத்துமே மனிதன் மாமனிதன் ஆகவேண்டும், மாமனிதன் தெய்வநிலைக்கு உயரவேண்டும் என்பதையே உணர்த்துவதாக அமைகின்றன. மானுடர்கள் ஏதாவது ஒன்றின் மீது ஆழ்ந்த பற்றுதல் வைக்கின்றனர் பற்றுதல் இறுதியில் பற்றற்ற சமயமுதல்வனைப் பற்றிடச் செய்கின்றது. இலைகள் உருவ வழிபாட்டின் ஆரம்பநிலையாக அமைகின்றன. வரலாற்றுக்கும் முற்பட்டகாலத்திலேயே தோன்றி இன்றும் நிலைத்து நிற்கும் சமயம் சைவசமயம் ஆகும். இச்சமய வழிபாட்டு நெறிகள் தமிழக மாந்தர்களின் அகச்சூழலை நெறிப்படுத்துவதாக அமைத்துள்ள தன்மைகள் நாயன்மார்களின் வாழ்வியல் கூறுகளுடன் ஆய்ந்து உரைக்கப் பெற்றது.

**நூற்பட்டியல் (Works Cited)**

1. அறிவொளி, அ. *காஞ்சிகாமாட்சி*. மணிவாசகர் நூலகம், 1983.
2. இராசேசுவரி பால சுப்பிரமணியம். *தமிழ்க் கடவுள் முருகன் வரலாறும் தத்துவமும்*. நிகழ் வெளியீடு, 2000.
3. இராமசுப்பிரமணியம், உரையாசிரியர். *பன்னிரு திருமுறைகள் (தொகுதி 1, 2)*. வர்த்தமானன் பதிப்பகம்.
4. கணேசலிங்கம், க. *சைவத்தை அறியுங்கள்*. உலக சைவப்பேரவை, இந்தியக்கிளை, 2002.
5. கல்பகம், சொ. *நந்தனார் கதைகள் – ஓர் ஆய்வு*. அருணா பதிப்பகம், 1998.
6. சந்திரசேகரன், கா. பெ. *தமிழ்நாட்டில் கணபதி வரவும் வழிபாடும்*. (பதிப்பகம் மற்றும் ஆண்டு குறிப்பிடப்படவில்லை).

7. சிவக்கவிமணி, சுப்பிரமணிய முதலியார், உரையாசிரியர். *பெரியபுராணம் (7-தொகுதி)*. சேக்கிழார் நிலைய வெளியீடு, 2001.
8. சுயம்பு, பெ. *இந்தியாவில் சமயங்கள்*. ஸ்ரீவிக்னேஷ் பதிப்பகம், 2013.
9. திருச்சிற்றம்பலம், சிவ, தெளிவுரை. *பெரியபுராணம்*. கங்கை புத்தகநிலையம், 2006.
10. நரசிம்மன், பி. ஆர். *சைவமரபும் மெய்ப்பொருளியலும்*. விட்ணு பதிப்பகம், 1994.
11. மதுராநந்தர், தொகுப்பாசிரியர். *இந்து சமயம் வளர்நிலை*. இந்து தர்ம வித்யா பீட வெளியீடு, 1999.